***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No.245/2010 – P.W. 5 (LW9)***

| | |
|---|---|
| *Name* | மகேஷ்கண்ணன் |
| *Father/Husband's Name* | நடராஜன் |
| *Village* | மேலநெம்மேலி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *43* |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 11.06.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி செல்லதுரை என்பவரை தெரியும். அசா.1 ஐ எனக்கு தெரியும்.

கடந்த 1998, 1999 காலக்கட்டத்தில் எனது ஊரை சேர்ந்த கணேசன் மகன் ராமச்சந்திரன் என்பவர் எனது அம்மாவிற்கு பணம் கொடுக்க வேண்டியிருந்தது. அது சம்பந்தமாக கணேசன் மகன் ராமச்சந்திரனை சந்தித்து பணம் கொடுக்குமாறு கேட்டேன். அவர் இழுத்தடித்து கொண்டே இருந்தார். குறிப்பிட்ட காலம் கழித்து கணேசன் மகன் ராமச்சந்திரன் அவருடைய நிலத்தை விற்றுவிட்டேன் என்றும், எனக்கு பணம் தருகிறேன் என்றும் கூறினார். அதற்காக நான் மறுநாள் காலை அவருடைய வீட்டிற்கு சென்றிருந்தேன். அன்றையதினம் அவர் மேற்படி நிலத்தை கிரயம் செய்வதாகவும், சாட்சிக்காக அழைத்த நபர்கள் வரவில்லை என்றும், என்னை சாட்சியாக வருமாறும் உள்ளிக்கோடடை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திர பதிவு செய்ய அழைத்து சென்றார். என்னுடன் வீரையன் மகன் ராமச்சந்திரன் என்பவரும் சாட்சியாக வந்திருந்தார். மேலும், பத்திரபதிவு அலுவலகத்தில் எங்கள் ஊரை சேர்ந்த சிவஞானமும், லெட்சுமணனும், நிலத்தை கிரயம் செய்து கொடுக்கும் கணேசன் மகன் ராமச்சந்திரனும் நிலத்தை கிரயம் பெறும் செல்லதுரை என்பவரும்

அங்கிருந்தனர். நான் அன்றையதினம் மேற்படி நிலம் கிரயத்தில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்து விட்டு வந்துவிட்டேன். மறுநாள் கணேசன் மகன் ராமச்சந்திரன் எனக்கு தரவேண்டிய பணத்தை வட்டியில்லாமல் கொடுத்தார். மேற்படி ஆவணத்தின் பதிவு எண்.851/09 ஆகும். இதுசம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கணேசன் மகன் ராமச்சந்திரன் அழைத்ததின் பேரில் தான் நான் சார்பதிவாளர் அலுவலகம் வந்தேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி விபரத்தை தான் போலீசார் என்னை விசாரித்தபோது சொன்னேன் என்றால் சரிதான்.

**Sd/--J. Tamizhmurugan,**

**Judicial Magistrate No.I,**
**Mannargudi.**